**ஈரோடு மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) அவர்களின் நடவடிக்கைகள்**

**முன்னிலை: திரு.வீ.ஜெகதீசன்,**

நாள்: 10.01.2022.

ந.க.எண்.30258/2021/பஅ2

பொருள்: பயிற்சி - ஊரக வளர்ச்சி அலகு - ஈரோடு மாவட்டம் - அரசு அலுவலர் பயிற்சி நிலையம், பவானி சாகர் - இளநிலை உதவியாளர்/உதவியாளர்களுக்கான 41 பணி நாட்கள் கொண்ட சுருக்கப்பட்ட அடிப்படைப் பயிற்சி 47-வது அணி 20.01.2022 முதல் 09.03.2022 வரை அடிப்படைப் பயிற்சி நடைபெறுதல் - பயிற்சியாளர்களை பயிற்சிக்கு அனுப்புதல் - தொடர்பாக.

பார்வை: மாவட்ட வருவாய் அலுவலர்/முதல்வர், அரசு அலுவலர் பயிற்சி நிலையம், பவானிசாகர் கடிதம் ந.க.எண். அ3/5252/2021, நாள்:28.12.2021.

********

**உத்தரவு:**

பார்வையில் காணும் கடிதத்தின்படி இளநிலை உதவியாளர்/ உதவியாளர்களுக்கான 41 பணிநாட்கள் கொண்ட சுருக்கப்பட்ட அடிப்படை பயிற்சி 47-வது அணி பயிற்சி 20.01.2022 முதல் 09.03.2022 வரை பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் நடைபெற உள்ளதாகவும், இப்பயிற்சிக்கு ஈரோடு மாவட்ட ஊரக வளர்ச்சி அலகிலிருந்து 4 பயிற்சியாளர்களை அனுப்பி வைக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**47-வது அணிக்கான பயிற்சியாளர்கள் ஒதுக்கீட்டு விபரம்**

| | | |
|---|---|---|
| 1. | துறையின் பெயர்/பிரிவு | ஊரக வளர்ச்சி துறை, ஈரோடு |
| 2. | அணி எண் | 47 |
| 3. | பயிற்சிக் காலம் | 20.01.2022 முதல் 09.03.2022 வரை |
| 4. | ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ள மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை (முதுநிலை வரிசைப்படி பயிற்சிக்கு அனுப்பப்பட வேண்டும். ஒதுக்கீட்டின்படி அனுப்ப இயலாத நிலை ஏற்படின் அந்த விவரத்தை உடன் இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்க வேண்டும்) | 4 பணியாளர்கள் மட்டும் |
| 5. | பயிற்சியில் சேர்க்கப்படும் நாள் மற்றும் நேரம் | 19.01.2022 முற்பகல் 9.00 மணி (பயிற்சியாளர்கள் அனைவரும் காலை 9.00 மணிக்கு தவறாது ஆஜராக வேண்டும்) |
| 6. | பயிற்சியாளர் சேர்க்கைப் பணி நடைபெறும் இடம் | டாக்டர்.ஏ.பி.ஜே.அப்துல்கலாம் கலையரங்கம் |

ஈரோடு மாவட்டம், பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி மைய வளாகத்தில் 20.01.2022 **முதல் 09.03.2022 வரை** நடைபெறவுள்ள இளநிலை உதவியாளர்/ உதவியாளர்களுக்கான 47-**வது அணி** அடிப்படை பயிற்சியில் இம்மாவட்ட ஊரக வளர்ச்சி அலகிலிருந்து பின்வரும் பணியாளர்களை முன்னுரிமை அடிப்படையில் கலந்து கொள்ள அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

| வ. எண். | முன்னுரிமை பட்டியல் வரிசை எண். | பணியாளர் பெயர்/பதவி/ அலுவலக முகவரி |
|---|---|---|
| 1 | 33 | சி.மைதிலி<br>இளநிலை உதவியாளர்,<br>ஊராட்சி ஒன்றியம்,<br>கொடுமுடி |
| 2 | 39 | ஈ.வெற்றிவேல்,<br>இளநிலை உதவியாளர்,<br>மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி)<br>அலுவலகம், ஈரோடு |
| 3 | 40 | க. பாபு,<br>இளநிலை உதவியாளர்,<br>ஊராட்சி ஒன்றியம்,<br>சென்னிமலை. |
| 4 | 41 | சி.கிருஷ்ணவேணி,<br>இளநிலை உதவியாளர்,<br>ஊராட்சி ஒன்றியம்,<br>மொடக்குறிச்சி. |

மேலும் பயிற்சியாளர்கள் பயிற்சிக்கு வரும் பொழுது பயிற்சிக்கு அனுப்பும் நபரின் விபரம் குறித்து பயிற்சி நிலையத்தால் வழங்கப்பட்ட பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம், அடையாளச் சான்றுடன் கூடிய பணி விடுவிப்பு ஆணை, ஒப்பந்தப் பத்திரம்(பச்சை தாளில் மட்டும்), ஆதார் அட்டை நகல், ஆளறி அடையாளச் சான்றுடன் கூடிய பணி விடுவிப்பு ஆணை, பணிவரன்முறை செய்யப்பட்ட உத்தரவின் நகல், கொரோனா பரிசோதனை செய்து கொண்ட சான்று, இரண்டு தடுப்பூசி செலுத்திக் கொண்டமைக்கான சான்று, தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதியில் குடியிருக்கவில்லை என்பதற்கான சான்று மற்றும் பயிற்சியாளரை அடையாளம் காணும் விதத்தில் பயிற்சியாளரின் சமீபத்திய பாஸ்போர்ட் அளவு புகைப்படம் பணி விடுவிப்பு ஆணையில் உரிய இடத்தில் ஒட்டப்பட்டு முறையே அலுவலகத்தலைவரால் மேலொப்பம் இடப்பட்டிருக்க வேண்டும் எனவும் பார்வையில் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட பணியாளர்கள் 19.01.2022 **அன்று முற்பகல் 9.00 மணிக்குள்** பயிற்சி நிலையத்தில் சேர்ந்து பயிற்சி பெற ஏதுவாக இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள அறிவுரைகளை பயிற்சியாளருக்கு தெளிவுபடுத்தி பணியிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும் எனவும், தாமதமாக செல்லும் நபர் பயிற்சியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்கள் எனவும், **ஏ.பி.ஜே அப்துல்கலாம் கலையரங்கம் முன்பாக பயிற்சியாளர் சேர்க்கை மறு ஆய்வுப்பணி நடைபெறும்** எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இப்பயிற்சியானது மேற்குறிப்பிட்ட இளநிலை உதவியாளர்/நேரடி உதவியாளருக்கு கட்டாய பயிற்சியானதால் இவரை தவறாது பயிற்சிக்கு பணிவிடுவிப்பு செய்து அதன் அறிக்கையினை தாமதமின்றி இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறும் தொடர்புடைய அலுவலகத் தலைவருக்கு தெரிவிக்கப்படுகிறது.

**இணைப்பு:** இணைப்பு -1
( பயிற்சியாளருக்கான அறிவுரைகள்)

மாவட்ட ஆட்சிரின் நேர்முக
உதவியாளர்(வளர்ச்சி),
ஈரோடு மாவட்டம், ஈரோடு.

10/1/2022

**பெறுதல்:**
சம்மந்தப்பட்ட பணியாளர்கள்,
(அலுவலகத்தலைவர் மூலம்)

**நகல்:** இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை-15.
**நகல்:** கூடுதல் இயக்குநர்/முதல்வர், மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனம், பவானிசாகர்
**நகல்:** கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி), மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, ஈரோடு.
**நகல்:** முதல்வர், அரசு அலுவலர் பயிற்சி நிலையம், பவானிசாகர்.
**நகல்:** செயற்பொறியாளர் அலுவலகம், ஈரோடு.
**நகல்:** சம்மந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள், ஈரோடு மாவட்டம்.
**நகல்:** பஅ3- பிரிவிற்கு.
**நகல்:** பஅ2 பிரிவு இருப்புக் கோப்பிற்கு.

**இணைப்பு-1**

**அணி எண்: 47**

**பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் 41 பணி நாட்கள் கொண்ட சுருக்கப்பட்ட அடிப்படைப் பயிற்சி பெற உள்ள பயிற்சியாளர்களுக்கான முக்கிய குறிப்புகள்**

1. **முக்கியமான ஆவணங்கள் உள்ள இணையதள இணைப்புகள் விவரம்:**

| வ. எண். | ஆவணங்கள் விவரம் | இணையதள இணைப்பு விவரம் |
|---|---|---|
| 1. | ஒப்பந்தப் பத்திரத்தின் மாதிரி படிவம் | http://cstibhavanisagar.org/trdoc/link.pdf |
| 2. | ஆளறி அடையாள அட்டையுடன் கூடிய பணி விடுவிப்பு ஆணை | |
| 3. | தொடர்புடைய அரசாணைகள் | |
| 4. | பயிற்சி நிலையம் அமைந்துள்ள இடம் | https://goo.gl/maps/BkQka6r2jxL2 |

பயிற்சியாளர்கள் மேற்படி இணையதள இணைப்பின் மூலம், ஒப்பந்தப் பத்திரத்தின் மாதிரிப் படிவம், ஆளறி அடையாள அட்டையுடன் கூடிய பணி விடுவிப்பு ஆணை மற்றும் பயிற்சி பெற தகுதி வாய்ந்தவர்கள், பயிற்சி பெறுவதிலிருந்து விலக்களிப்பு பெற தகுதி வாய்ந்தவர்கள் தொடர்பான அரசாணைகள் ஆகியவற்றை உடனடியாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

2. **பயிற்சி சேர்க்கையின் போது பயிற்சியாளர்களால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்களின் பட்டியல்:**

   a. **ஒப்பந்தப் பத்திரம்**

   - அரசு கடித எண்.64943/ஏ/75-17, பொது (பயிற்சி) துறை, நாள்: 27.07.1976 மற்றும் அரசு கடித எண்.74649/பயிற்சி-1/88-2, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்த (பயிற்சி-1) துறை, நாள்: 26.10.1988 ஆகியவற்றில் அறிவுறுத்தப்பட்டவாறு, உரிய படிவத்தில் பயிற்சியாளர்கள் தங்களது இரண்டு மாத சம்பளம் அல்லது குறைந்தது ரூ.50,000/-க்கு குறைவில்லாமல் ஒரு ஒப்பந்தப் பத்திரத்தை பத்திரத் தாளில் தயாரிக்க வேண்டும். சில அலுவலகங்களில் வெள்ளை தாளில் தயாரித்து அனுப்பும் ஒப்பந்த பத்திரங்களை ஏற்க இயலாது. இரண்டு பிரதிகள் தயார் செய்து சாட்சிகள் பிணையதாரர் மற்றும் அலுவலகத் தலைவர் ஆகியோரால் முறையாக கையொப்பம் இடப்பட்டு அலுவலக முத்திரையுடன் ஒரு பிரதியை பயற்சி சேர்க்கை அன்று தவறாது நேரில் சமர்ப்பிக்க வேண்டும். மற்றொரு பிரதியை அலுவகத்தில் பாதுகாப்பாக வைக்க வேண்டும்இ

   b. **ஆளறி அடையாளச் சான்றுடன் கூடிய பணிவிடுவிப்பு ஆணை:**

   - முறையான படிவத்தில் ஆளறி அடையாளச் சான்றுடன் கூடிய பணி விடுவிப்பு ஆணையினை பயிற்சியாளர் பயிற்சி சேர்க்கையின் பொழுது சமர்ப்பிக்க வேண்டும்.
   - பயிற்சியாளரை அடையாளம் காணும் விதத்தில் பயிற்சியாளரின் சமீபத்திய பாஸ்போர்ட் அளவு புகைப்படம் பணிவிடுவிப்பு ஆணையில் உரிய இடத்தில் ஒட்டப்பட்டு, முறையே அலுவலகத் தலைவரால் மேலொப்பம் இடப்பட்டிருக்க வேண்டும்.

c. பணிவரன்முறை செய்யப்பட்ட உத்தரவின் நகல்:

- நடைமுறையில் உள்ள விதிகளின் அடிப்படையில் இளநிலை உதவியாளர்/நேரடி நியமன உதவியாளர் ஆகியோர் உரிய அலுவலரால் வழங்கப்பட்ட பணிவரன்முறை செய்யப்பட்ட உத்தரவின் நகலை சேர்க்கை நாளன்று சமர்ப்பித்தல் வேண்டும். பணிப்பதிவேட்டில் உள்ள பதிவு நகல்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது உத்தரவு நகல்களை வைத்தே சேர்க்கை மேற்கொள்ளப்படும். இது பயிற்சியின் மிக முக்கியமான ஆவணம் ஆகும்.

3. பயிற்சிக்காலம் முழுமைக்குமான பயிற்சிக் கட்டண விவரம்:

- 19.01.2022 அன்று காலை 9.00 மணிக்குள் பயிற்சி நிலையத்தில் ஆஜராக வேண்டும். கீழ்க்கண்டுள்ள பயிற்சி கட்டணத் தொகையை ரொக்கமாகப் பெறப்படமாட்டாது. இணையவழியாக மட்டுமே செலுத்தப்பட வேண்டும்.

| வ. எண் | கட்டண விவரம் | பயிற்சியாளர்கள் செலுத்த வேண்டிய மொத்த தொகை ரூ. |
|---|---|---|
| 1 | உணவக முன்பணம்<br>*(இத்தொகை தற்காலிகமானது விலை ஏற்றத்தை பொருத்து கூடுதல் தொகை செலுத்த நேரிடலாம்) | 6000 |
| 2 | அறை வாடகை (50 x ரூ.60) | 3000 |
| 3 | பஞ்சாயத்து நிதி | 120 |
| 4 | காப்புத் தொகை<br>(திரும்ப வழங்கக்கூடியது) | 100 |
| 5 | பயிற்சிக் கையேடு | 585 |
| 6 | பராமரிப்பு நிதி (50 x ரூ.5) | 250 |
| | மொத்த கட்டணம் | 10,055 |

இப்பயிற்சி நிலைய இணையதளத்தில் (www.cstibhavanisagar.in -> Online Admission) இணைய வழியாக 11.01.2022 காலை 9.00 மணி முதல் 17.01.2022 மாலை 5.00 மணிக்குள் பயிற்சியாளர்கள் தங்களது விபரங்களை பதிவேற்றம் செய்து, பயிற்சிக் கட்டணத்தை இணைய வழியாக செலுத்த வேண்டும். தொகை செலுத்திய UTR எண்ணை முகப்பு விண்ணப்பத்தில் மறவாமல் குறிப்பிட வேண்டும். தொடர்புடைய ஆவணங்கள் பதிவிறக்கம் செய்வது மற்றும் கையொப்பம் பெறுவது (பதிவிறக்கம் செய்து அதில் அலுவலரின் சான்றொப்பமிட்டு உடன் கொண்டு வருதல் வேண்டும்) தொடர்பாக கொடுக்கப்படும் விரிவான வழிமுறைகளை (பதிவேற்றம் தொடர்பான வழிமுறைகளுக்கு இணையதளத்தைப் பார்க்கவும்) பின்பற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

4. <u>அனைத்து பயிற்சியாளர்கள் கட்டாயம் கொண்டு வர வேண்டிய பொருட்கள் விவரம்2</u>

| வ. எண். | பொருட்களின் விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | வெள்ளை நிற கான்வாஷ் ஷூ மற்றும் கருநீல நிற சாக்ஸ் | 1 செட் |
| 2 | பக்கெட் பெரியது மற்றும் மக் சிறியது | 1 எண் |
| 5 | போர்வை | 1 எண் |
| 6 | எவர்சில்வர் கப், தட்டு, டம்ளர் மற்றும் ஸ்பூன் | 1 எண் |
| 7 | டார்ச் விளக்கு மற்றும் குடை | 1 எண் |
| 8 | நோட் மற்றும் பால்பாய்ண்ட் பேனா | 10 எண்கள் |
| 9 | கால்குலேட்டர் | 1 எண் |
| 10 | யோகா மேட் | 1 எண் |

<u>பயிற்சியாளர்களுக்கான பொதுவான அறிவுரைகள்</u>:-

1. பயிற்சியாளர்கள் சேர்க்கை நாளில் காலை 9.00 மணிக்கு பயிற்சி சேர்க்கை நடைபெறும் இடத்தில் ஆஜராக வேண்டும். ஏற்கனவே போதுமான கால அவகாசம் வழங்கப்படும் நிலையில் காலதாமதமாக வரும் பயிற்சியாளர்கள் பயிற்சியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்கள். ஏனெனில் அவர்களுக்கு பதிலாக மாற்றுப் பயிற்சியாளர்கள் பயிற்சிக்கு அழைக்கப்படுவர். ஆகவே பயிற்சிக்கு வரும் பயிற்சியாளர்கள் உரிய நேரத்தில் பயிற்சிக்கு ஆஜராக ஏதுவாக சேர்க்கை நாளுக்கு முதல் நாள் பணிவிடுப்பு ஆணையினை அலுவலகத் தலைவரிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். பயிற்சியாளர்கள் பயிற்சி நடைபெறும் இடத்தை https://goo.gl/maps/BkQka6r2jxL2 என்ற இணையதளத்தின் வாயிலாக தெரிந்து கொள்ளலாம்.
2. பயிற்சிக்கு விடுவிக்கப்படும் பணியாளர்களுக்கு போதுமான பயண முன்பணம் வழங்கப்படுதல் வேண்டும். மேலும் பயிற்சிக்கு உரிய கட்டணத்தை கண்டிப்பாக Online-ல் செலுத்தி இருக்க வேண்டும். இவ்வாறு Online method-ல் கட்டணம் செலுத்த இயலாத பயிற்சியாளர்கள் பயிற்சியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்கள்.
3. இந்த பயிற்சிக்காலத்தில் குடும்பத்தில் பிறப்பு, இறப்பு போன்ற எதிர்பாராத நிகழ்வுகளுக்கு மட்டும் 2 நாட்கள் மட்டும் தற்செயல் விடுப்பு வழங்கப்படும். பயிற்சிக் காலத்தில் நீதிமன்ற வழக்கு விசாரணை மற்றும் பிற அலுவலகப் பணிகள் ஆகியவற்றுக்கு பயிற்சியாளர்கள் செல்ல அனுமதிக்கப்பட மாட்டார்கள்.
4. இந்த பயிற்சிக்கு அனுப்பப்படும் பயிற்சியாளர்கள் **முக்கியமாக பெண்கள்** பாதுகாப்பு கருதி விலை மதிப்புள்ள நகைகள் மற்றும் பொருட்கள் ஆகியவற்றை கொண்டு வருதல் கூடாது.
5. மாற்றுத் திறனாளிகளில் 100% வீதத்திற்கும் குறைவாக உள்ள மாற்றுத் திறனாளிகள் அதற்குரிய ஆதாரங்களைக் கொண்டு வருதல் வேண்டும்.

**கோவிட்-19 தொடர்பான பயிற்சியாளர்களுக்கான பொதுவான அறிவுரைகள்:-**

1. பயிற்சிக்கு வரும் பயிற்சியாளர்கள் அருகில் உள்ள அரசு மருத்துவமனை அல்லது அரசு ஆரம்ப சுகாதார மையத்தில் கோவிட்-19 பரிசோதனை 16.01.2022 மற்றும் 17.01.2022-ல் மேற்கொண்டு அதன் முடிவுகளை உடன் எடுத்து வருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும் பரிசோதனை முடிவு பெற இயலாதவர்கள் தங்களுடைய கைபேசியில் வரும் குறுந்தகவலை (SMS) உடன் எடுத்துவருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். துறைத் தலைவர்கள் அலுவலகத் தலைவர்கள் மாதிரி எடுக்கும் மருத்துவமனைகளுடன் தொடர்பு கொண்டு விரைவாக கோவிட் பரிசோதனை முடிவுகளை அறிவிக்க கேட்டுக் கொள்ள வேண்டும். பயிற்சிக்கு வரும் அனைத்து பணியாளர்களும் கோவிட்-19 தடுப்பூசி இரண்டு தவணைகளும் கட்டாயம் செலுத்தியிருக்க வேண்டும் என அறிவுறுத்தப்படுவதுடன், அதற்கான சான்றுடன் சேர்க்கை அன்று வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
2. பயிற்சியாளர்கள் பயிற்சிக்கு வரும் பொழுது கோவிட் -19 தொடர்பான அறிகுறிகள் (காய்ச்சல், தொடர் இருமல், சளி) உள்ளது தெரியவந்தால் இப்பயிற்சிக்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.
3. கோவிட் தொற்றிலிருந்து குணமடைந்து வீட்டில் தனிமைப்பட்டுள்ளவர்களும் பயிற்சிக்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.
4. இணை நோயுற்ற தன்மை (Co-Morbidity) 1. உயர் இரத்த அழுத்தம், 2. கட்டுப்பாடில்ல நீரிழிவு நோய், 3. சிறுநீரக கோளாறு, 4. ஆஸ்துமா/நுரையீரல் சம்பந்தப்பட்ட நோய்களுக்கு நீண்ட நாட்களாக மருந்து எடுத்துக் கொள்ளும் நபர்கள், தீராத நோய் உள்ளவர்கள் மற்றம் சமீபத்தில் அறுவை சிகிச்சை மேற்கொண்டவர்களுக்கு தற்பொழுது கோவிட் -19 சூழ்நிலையில் பயிற்சி பெற அனுமதி இல்லை.
5. தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் உள்ள பயிற்சியாளர்களுக்கு இப்பயிற்சியில் கலந்து கொள்ள அனுமதி இல்லை. பணிபுரியும் அலுவலகத்தில் உள்ள அலுவலர்களிடமிருந்து தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதியில் இல்லை என்பதற்கு சான்று பெற்று வர வேண்டும்.
6. தற்சமயம் கோவிட் -19 சூழ்நிலை காரணமாக கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் குழந்தைகளுடன் வரும் பயிற்சியாளர்களுக்கு அனுமதி இல்லை.
7. பயிற்சியாளர்கள் அனைவரும் பயிற்சிக் காலம் முழுவதும் தமிழக அரசின் நிலையான கோவிட் -19 வழிகாட்டு நெறிமுறைகளை தவறாது பின்பற்றப்பட வேண்டும்.
8. பயிற்சியின் போது முகக்கவசம் கட்டாயம் அணிந்திருக்க வேண்டும். பயிற்சிக் காலத்திற்கு முழுவதும் தேவைப்படும் முகக்கவசத்தை உடன் கொண்டு வர வேண்டும்.
9. கோவிட்-19 வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றாத பயிற்சியாளர்கள் உடன் பயிற்சியிலிருந்து விடுவிக்கப்படுவதுடன் அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளத் துறைத் தலைமைக்கு பரிந்துரை செய்யப்படும்.
10. பயிற்சிக்கு வரும் பயிற்சியாளர்கள் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் 19.01.2022 **அன்று முற்பகல் 09.00 மணிக்குள்** ஆஜராக வேண்டும்.
11. பயிற்சியாளர்கள் பயிற்சிக் காலம் முழுவதும் (மாற்றுத் திறனாளிகளின் வாகனங்களைத் தவிர) இரு சக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்களை எடுத்து வர அனுமதி இல்லை.
12. அனைத்து பயிற்சியாளர்களும் கொரோனா தடுப்பூசி 2 டோஸ்களும் செலுத்தியமைக்கு சான்றிதழ் பதிவிறக்கம் செய்து உடன் கொண்டு வருதல் வேண்டும்.